# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.CC.259/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.2 |
| Name | : | . இளங்கோவன் |
| Father's Name | : | . ஆறுமுகம் |
| Village | : | . |
| Taluk | : | . |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | . |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 11.08.2025.

1, 3, 4,6 எதிரிகள் ஆஜர். 2, 5 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.

<u>முதல் விசாரணை</u>

. நான் மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்துவருகிறேன். அ.சா.1 எனது தாயார் ஆவார். ஆஜர் எதிரிகளளை எனக்கு தெரியும். அவர்கள் எங்கள் பக்கத்து கழனியை சேர்ந்தவர்கள். எனக்கு தேதி ஞாபகம் இல்லை. கடந்த 8

வருடங்களுக்கு முன்பு எங்கள் வயலில் நடவு செய்திருந்தோம். எங்களுக்கு பக்கத்தில் எதிரியின் கழனி உள்ளது. அவர்கள் அப்போது வரப்பு வெட்டிக்கொண்டிருந்தார்கள் நானும் எனது தயார் மற்றும் எனது மனைவி சென்று ஏன் வரப்பை வெட்டுகின்றீர்கள் என்று கேட்டோம். அப்போது நீ என்னடா கேட்கின்றாய் என்று மணி, மணி மகன் ஜீவா மற்றொரு மகன் பெயர் தெரியவில்லை. மைத்துனர் வெங்கடேசன், சக்தி நகரை சேர்ந்த நாராயணமூர்த்தி ஆகியோர்கள் தடி மற்றும் சைக்கிள் செயினுடன் வந்து எங்கள் மூவரையும் தாக்கிவிட்டார்கள். அதன் பிறகு 108 ஆம்புலன்ஸ் மூலமாக வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தோம். இதுசம்மந்தமாக எனது தயார் புகார் கொடுத்தார். போலிசார் என் தாயாரை விசாரித்தார்கள் என்னை விசாரித்தார்களா என்று ஞாபகம் இல்லை.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எனது கழனியன் சர்வே எண் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் நடவு செய்ததாக சொல்லும் எனது கழனி எந்த கிராமத்தில் உள்ளது என்றால் கள்ளப்புலியூர் கிராமத்தில் உள்ளது. சம்பவ சமயத்தில் எதிரிகளின் கழனியில் பயிர் ஏதும் செய்திருந்தார்களா என்றால் செய்யவில்லை. பயிர் செய்யாத கழனியில் வரப்பு வெட்டவேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்றால் முன்னாடியே நான ஜெ.சி.பி வைத்து சமபடுத்தினேன். அதனால் வரப்பு அழிந்துவிட்டதா என்றால் ஆமாம். நான் தான் எதிரிகளின் நிலத்தில் அத்துமீறி நுழைந்து எதிரிகளின் நிலத்தை பாழக்கிவிட்டேன் என்றால் சரியல்ல. எனது நிலத்தைதான் நான் சரி செய்தேன். நான் சொல்வது தவறு என்றாலும், என்னுடைய நிலமாக இருந்திருந்தால் அதற்குறிய சர்வே எண் எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. எதிரிகளின் கழனி சர்வே எண்.2/1எ1டி வடக்கப்பட்டு கிராமம், திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் எனது கழனி வந்தவாசி தாலுக்காவில் அமைந்துள்ளது. எதிரிகள் என்னை தாக்கியதாக சொல்லப்படும் தடி, சைக்கிள் செயின் மற்றும் மண்வெட்டி ஆகியவற்றை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் எனக்கு தெரிந்து எங்களுக்கு முன்னால் கைப்பற்றவில்லை. சம்பவம் உண்மையில் நடந்திருந்தால் போலிசார் எங்களுக்கு முன்னால் மேற்படி பொருட்களை கைப்பற்றியிருப்பார் என்றால் சரியல்ல. எங்களுக்கும். எதிரிகளுக்கும் கழனி சம்மந்தமாக சிவில் வழக்கு நிலுவையில் உள்ளதாக என்றால் எனக்கு தெரிந்து இல்லை. வாதிகள் எனக்கும் என் சகோதரர்களுக்கும் எதிராக அ.வ.எண்.36/2016 என்ற எண்ணில் வந்தவாசி உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது தம்பிக்கு தெரியும். திருநாவுக்கரசு என்பது எனது தம்பி ஆவார். எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளதா என்றால் எனக்கு தெரிந்து 2 வழக்குகள் உள்ளது. நான் சொல்வதுபோல் எதிரிகள் எங்களை தாக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் குற்றவாளி இல்லையென்றால் சரியல்ல.